சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண்.305/2022

PW - 1

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ம் நாள் புதன்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | சண்முகம் |
| க.பெ. (அ) த.பெ. | வேல்ச்சாமி கவுண்டர் |
| வயது | 67 |
| முகவரி | கரியாஞ்செட்டிபாளையம், பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | |
|---|---|
| வாசாஆ 1- | 27.12.1968 தேதியிட்ட பாக சாசனத்தின் சான்று நகல் |
| வாசாஆ 2 - | 28.08.1959 தேதியிட்ட கோவை சார்பு நீதிமன்றம் வழங்கிய சுவாதீனத்தை பொருத்து சான்று நகல் |
| வாசாஆ 3 - | 01.07.2022 தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள சிட்டா |
| வாசாஆ 4 - | 02.02.2020 தேதியிட்ட 2 ம் வாதி புகார் மனு ரசீது |
| வாசாஆ 5- | 08.12.2020 தேதியிட்ட பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஆனைமலை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிய குறிப்பாணை |

வாசாஆ 6- 30.12.2020 தேதியிட்ட பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஆனைமலை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிய குறிப்பாணை

வாசாஆ 7- 15.02.2021 தேதியிட்ட பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட ஒப்புகை சீட்டு

வாசாஆ 8- தாவா வண்டித்தடத்தை காட்டும் போட்டோ சிடியுடன் தாக்கல் செய்யப்படுகிறது. (அது பிரதிவாதியின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

வாசாஆ 9- எனது தகப்பனார் பெயரில் உள்ள வரி ரசீது

எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி